# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு


## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

### இலங்கை மத்திய வங்கி

2023 யூன்
தொகுதி 05 வெளியீடு 06


## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்





2023 யூனில் வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,005 மில்லியனிற்கு 19.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2023 யூனில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,369 மில்லியனிற்கு 11.6 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதங்கள் (%)





2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் என்பன முறையே 10.0 சதவீதத்தினாலும் 18.6 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன.

### வர்த்தக மீதி (ஐ.அ.டொ. மில்)





வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கானது 2022 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 22 மில்லியன் தொகை கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2023 யூனில் ஐ.அ.டொலர் 364 மில்லியன் தொகை கொண்ட பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் - (2023 சன-யூன்)




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் - (சன-யூன்)




### ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் - (சன-யூன்)





கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், வேளாண்மை ஏற்றுமதிகளில் சிறியளவிலான அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது.


2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண் என்பன முறையே 1.9 சதவீதத்தினாலும் 8.3 சதவீதத்தினாலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-யூன்)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*





*2022 யூலை மாதத்திற்கான இறப்பர் (நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர்) விலைகள் ஏலத்தில் குறித்துரைக்கப்படவில்லை.


தேயிலை மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பவற்றின் உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளினால் உந்தப்பட்டு 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சிறிதளவு அதிகரித்தன. இருப்பினும், இக்காலப்பகுதியில் தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள், கடலுணவு, இயற்கை இறப்பர் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பவற்றிலிருந்து தாழ்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்கள் பதிவுசெய்யப்பட்டன.

# கைத்தொழில் ஏற்றுமதிகள்


### கைத்தொழில் ஏற்றுமதிகள்





### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-யூன்)





### நீர்க்கல மற்றும் வானூர்தி மற்றும் எரிபொருட்களின் ஏற்றுமதி விலைகள்





ஆடைகளினால் முக்கியமாக தூண்டப்பட்டு அநேகமான கைத்தொழில் உற்பத்திகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட பரந்த அடிப்படையிலானதொரு வீழ்ச்சியின் காரணமாக 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், இக்காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் மற்றும் விலங்குத்தீன் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.

# இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் - (சன-யூன்)





### இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் - (சன-யூன்)





இடைநிலை, முதலீட்டு மற்றும் நுகர்வுப் பொருட்கள் ஆகிய சகல முக்கிய இறக்குமதி வகைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் காரணமாக 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இறக்குமதி அளவுச் சுட்டெண் மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண் என்பனவும் முறையே 9.6 சதவீதத்தினாலும் 10.0 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன.

## நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்


**நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள்**





**நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-யூன்)**





**சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்**





உணவு (முக்கியமாக, அரிசி) மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் (முக்கியமாக, ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள்) ஆகிய இரண்டினதும் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிகளினால் உந்தப்பட்டு 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், உணவு மற்றும் குடிபானங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சீனி மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது 2023இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கதாயமைந்தது.

## இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்


**இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்**





**இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**



### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செயலாற்றம் (சன-யூன்)




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்த சராசரி)





*2022 மார்ச், ஏப்பிறல், யூன், யூலை மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 பெப்புருவரி ஆகிய மாதங்களில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.


புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், எரிபொருள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பவற்றின் தாழ்ந்தளவிலான இறக்குமதிகளின் முதன்மைக் காரணமாக 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கோதுமை, வளமாக்கிகள், மற்றும் வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்துக் காணப்பட்டது.

## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள்


### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-யூன்)




பொறி மற்றும் சாதனங்கள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் ஆகிய சகல முக்கிய முதலீட்டுப் பொருள் வகைகளிலும் ஏற்பட்ட தாழ்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக 2023இன் முதலாம் அரையாண்டுப் பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு (அ)

### ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 யூன் | 2023 யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) | 2022 சன-யூன் | 2023 சன-யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **251.5** | **211.3** | **-16.0** | **1,226.0** | **1,229.2** | **0.3** |
| இதில் | தேயிலை | 116.5 | 111.5 | -4.3 | 577.4 | 635.5 | 10.1 |
| | தெங்கு | 40.5 | 28.5 | -29.8 | 215.8 | 161.0 | -25.4 |
| | வாசனைத்திரவியங்கள் | 31.7 | 27.8 | -12.6 | 159.6 | 176.0 | 10.3 |
| | கடலுணவு | 36.4 | 17.9 | -50.8 | 142.2 | 132.4 | -6.9 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **991.2** | **790.8** | **-20.2** | **5,268.2** | **4,616.0** | **-12.4** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 568.8 | 430.0 | -24.4 | 2,977.3 | 2,460.6 | -17.4 |
| | இறப்பர் உற்பத்திகள் | 99.5 | 72.1 | -27.5 | 493.3 | 432.6 | -12.3 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 54.2 | 39.4 | -27.4 | 345.3 | 247.2 | -28.4 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 52.3 | 40.3 | -22.9 | 274.4 | 248.9 | -9.3 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 50.0 | 52.9 | 5.8 | 270.5 | 317.6 | 17.4 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 36.1 | 52.4 | 45.1 | 200.3 | 268.8 | 34.2 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 6.8 | 6.3 | -8.4 | 37.3 | 34.1 | -8.5 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **6.0** | **3.2** | **-46.6** | **27.9** | **25.7** | **-7.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **1,248.8** | **1,005.3** | **-19.5** | **6,522.2** | **5,871.0** | **-10.0** |

### இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 யூன் | 2023 யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) | 2022 சன-யூன் | 2023 சன-யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **176.5** | **251.7** | **42.6** | **1,530.2** | **1,493.5** | **-2.4** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 89.0 | 146.8 | 64.9 | 856.9 | 845.5 | -1.3 |
| இதில் | காய்கறிகள் (ஆ) | 21.6 | 33.7 | 56.5 | 169.1 | 173.0 | 2.3 |
| | அரிசி | 16.2 | 2.5 | -84.4 | 170.8 | 10.1 | -94.1 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 87.5 | 104.9 | 19.9 | 673.3 | 648.0 | -3.8 |
| இதில் | மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 36.4 | 58.0 | 59.2 | 267.1 | 364.4 | 36.5 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **815.7** | **875.4** | **7.3** | **6,658.4** | **5,446.5** | **-18.2** |
| இதில் | எரிபொருள் | 200.1 | 290.0 | 44.9 | 2,583.9 | 2,354.8 | -8.9 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 280.9 | 194.1 | -30.9 | 1,685.6 | 1,194.0 | -29.2 |
| | வளமாக்கிகள் | 1.5 | 25.3 | 1,545.0 | 46.0 | 86.9 | 88.9 |
| | கோதுமை மற்றும் சோளம் | 12.2 | 41.1 | 236.6 | 136.3 | 188.0 | 37.9 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **234.3** | **242.0** | **3.3** | **1,839.6** | **1,220.6** | **-33.6** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 156.4 | 163.7 | 4.7 | 1,181.3 | 822.4 | -30.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,226.5** | **1,369.1** | **11.6** | **10,028.1** | **8,160.5** | **-18.6** |

### வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 2022 யூன் | 2023 யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) | 2022 சன-யூன் | 2023 சன-யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | 22.3 | -363.7 | | -3,506.0 | -2,289.5 | |

### வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (இ)

| விடயம் | 2022 யூன் | 2023 யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) | 2022 சன-யூன் | 2023 சன-யூன் | ஆ-ஆ. மாற்றம்(%) |
|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | |
| பெறுமதிச் சுட்டெண் | 173.8 | 139.9 | -19.5 | 151.3 | 136.2 | -10.0 |
| அளவுச் சுட்டெண் | 192.3 | 156.9 | -18.4 | 165.6 | 162.5 | -1.9 |
| அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 90.4 | 89.2 | -1.3 | 91.4 | 83.8 | -8.3 |
| **இறக்குமதி** | | | | | | |
| பெறுமதிச் சுட்டெண் | 109.8 | 122.5 | 11.6 | 149.6 | 121.7 | -18.6 |
| அளவுச் சுட்டெண் | 102.2 | 131.7 | 28.8 | 139.6 | 126.2 | -9.6 |
| அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 107.4 | 93.1 | -13.3 | 107.1 | 96.4 | -10.0 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | 84.2 | 95.8 | 13.8 | 85.3 | 86.9 | 1.9 |

(அ) தற்காலிகமானது
(ஆ) தானியங்கள், வெங்காயம், உருளைக்கிழங்குகள், அவரை வகை காய்கறிகள் மற்றும் ஏனையவற்றினை உள்ளடக்கியுள்ளது
(இ) ஐ.அ.டொ. நியதிகளில்